## *09.03.2018:-* ஒப்புரவு அருளடையாளத்தில் வாழ்வின் அர்த்தத்தைக் கண்டுகொள்கின்றோம்



**மார்ச், *09*, வெள்ளிக்கிழமையன்று, ‘ஆண்டவரோடு *24* மணி நேரங்கள்’ எனப்படும் ஒப்புரவு அருளடையாள வழிபாடு நிகழ்கின்றவேளை, இந்த அருளடையாளத்தின் முக்கியத்துவத்தையும், இறைவனோடு நாம் ஒப்புரவாக வேண்டியதன் அவசியத்தையும், தன் டுவிட்டர் செய்திகளில் குறிப்பிட்டுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.**

**“நிறைய காரியங்கள் ஆற்றவேண்டிய சூழலில், நம் ஆன்மீக வாழ்விலும், இறைவனோடு நமக்குள்ள உறவிலும், உண்மையிலேயே முக்கியமானதை நாம் அடிக்கடி புறக்கணித்து விடுகின்றோம், எனவே, இவ்வாறு நடந்துகொள்வதை நிறுத்தி, செபத்திற்கு நேரம் ஒதுக்குவோம்”** என்ற சொற்களை, தன் டுவிட்டர் செய்தியாக வெளியிட்டுள்ளார், திருத்தந்தை.

பிற்பகலில் வெளியிட்ட மற்றுமொரு டுவிட்டர் செய்தியில், “ஒப்புரவு அருளடையாளத்தில், ஆண்டவரிடம் திரும்பும் நம் பாதையையும், வாழ்வின் அர்த்தத்தையும் கண்டுகொள்கின்றோம்” என்று கூறியுள்ளார் திருத்தந்தை.

மேலும், மார்ச், 09, வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு, வத்திக்கான் தூய பேதுரு பசிலிக்கா பேராலயத்தில், ‘ஆண்டவரோடு 24 மணி

நேரங்கள்’ எனப்படும் ஒப்புரவு அருளடையாள வழிபாட்டை தலைமையேற்று நிறைவேற்றுகின்றார், திருத்தந்தை பிரான்சிஸ்.

ஆதாரம் : வத்திக்கான் வானொலி